[15th March 1965

புள்ளி விவரங்களைக் கொடுக்கப்போகிறேன். அதிலிருந்து நம்முடைய தமிழ் நாட்டில்தான் பரவலாக எல்லா ஜில்லாக்களிலும் தொழில்கள் அமைந்திருக்கின்றன என்பது தெரியவரும். ஆனால், தொழிற்சாலை எந்த இடத்தில் வேண்டுமானாலும் ஆரம்பிக்கப்படலாம் என்று நினைப்பது சரியல்ல. இதற்கு சில வசதிகள் வேண்டும். போக்குவரத்து வசதி, மூலப்பொருள்கள் கிடைக்கக்கூடிய வசதி, அல்லது மார்கெட் வசதி, விற்பனையாகக்கூடிய வசதி ஆகிய வசதிகளில் ஏதாவது இருக்கவேண்டும். திடீரென்று மனித சஞ்சாரமே இல்லாத ஒரு இடத்தில் ஏதாவது ஒரு தொழில் ஆரம்பிக்கப்படமுடியும் என்று நினைப்பது சரியல்ல.

திரு. வை. சங்கரன் : பொதுவாக இந்த ஒப்பந்தம் மத்திய அரசாங்கத்தின் மூலம் செய்யப்பட்டாலும்கூட, வெளிநாட்டு உதவி வேண்டும், தொழில் நுட்ப உதவி வேண்டும், ஒத்துழைப்பு வேண்டும் என்பதில், எந்த இடத்தில் வேண்டும், எதற்கு வேண்டும் என்பதை நம்முடைய மாநில அரசாங்கம் சிபார்சு செய்ய முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நேரடியாக மத்திய சர்க்கார் தான் செய்கிறது.

Acquisition of land for Industrial Estate (Nagercoil).

* 238 Q.—SRI A. KUNJAN NADAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the extent of land acquired in Nagercoil (Kanyakumari district) for the opening of an Industrial Estate; and

(b) whether compensation has been paid to the affected land owners?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) 20·70 acres.

(b) The compensation will be paid when the award is passed by the Land Acquisition Officer.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களில் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டது தவறு என்று ஏதாவது அப்பீல்கள் போட்டிருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்பீல் போடாதவர்கள் ரொம்பக் குறைவு.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : நான் இதைக் கேட்பதற்குக் காரணம், குடியிருப்பு இடங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். அது உண்மையா என்பதைக் கேட்டேன். அதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பொதுவாக எந்த இடத்தை யார் ஆர்ஜிதம் செய்தாலும், அந்த இடத்தில் "அப்ஜெக்ஷன்" வரும். அந்த "அப்ஜெக்ஷன்" மூலம் தான் கோர்ட்டுகளுக்கெல்லாம் போய்க் கொண்டிருக்கிறது.

Regional Engineering College, Tiruchirappalli.

* 239 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the stage reached in the establishment of Regional Engineering College, Tiruchirappalli; and

(b) the details of the work pending in respect of the same?